புலிப்பாக்கம் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.மு.சிவகலைச்செல்வன்

ந.க.எண். 2285 / 2017/ அ1

நாள் - 14.02.2018

பொருள் கட்டிட வரைபட அனுமதி - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - புலிப்பாக்கம் ஊராட்சி, காந்தலூர் கிராமம், நில அளவை எண் - 121 / 1C, 120 / 9B - ல் 1074.81 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு நகர ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்பு மூலம் இறுதி ஒப்புதல் வழங்குதல் - சார்ந்து.
கட்டிடம் / சுற்றுச்சுவர் / கிணறு / முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

காஞ்சிபுரம் மாவட்டம்
புலிப்பாக்கம் ஊராட்சி
காட்டாங்குளத்தூர் ஒன்றியம்

பார்வை
1) அரசாணை நிலை எண். 255 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள் 18.08.1997.
2) அரசாணை நிலை எண் - 71 ஊரக வளர்ச்சி (சி2) துறை நாள் - 16.06.2003
3) அரசாணை நிலை எண் - 295 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (12) துறை நாள் - 27.02.2013
4) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் - 210 / 2013 / செம3 நாள் - 21.12.2012
5) இவ்வலுவலக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ( ZONE - 3 ) அவர்களின் ஆய்வறிக்கை நாள் - 09.02.2018
6) ஊராட்சிமன்ற தீர்மான எண் / நாள் - 59 / 03.01.2018

*********

உத்தரவு

காஞ்சிபுரம் மாவட்டம் , காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் , புலிப்பாக்கம் ஊராட்சி காந்தலூர் கிராமம் நில அளவை எண் - 121 / 1C, 120 / 9B - ல் 1074.81 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு நகர ஊரமைப்பு துறை மூலம் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

N.ராஜலட்சுமி த/பெ நாராயணன் என்பவர் புலிப்பாக்கம் ஊராட்சி காந்தலூர் கிராமம் நில அளவை எண் - 121 / 1C, 120 / 9B - ல் 1074.81 ச.மீ மனையிடத்தில் 1606.34 ச.மீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு கட்டுமான வரைபடங்களுக்கு கட்டுவதற்கு உள்ளாட்சி அமைப்பு மூலம் இறுதி ஒப்புதல் கவ / தனி அலுவலர் (செமு) எண் - 10 /2017 - 2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அளிக்கப்படுகிறது.

இந்த அனுமதியானது **14/02/2018** நாளது முதல் **13/02/2021** - ம் நாள் வரை மூன்று ஆண்டுக்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.80700/- (ரூபாய் எண்பதாயிரத்து எழுநூறு மட்டும் ) செலுத்தியமைக்கான பலவகை இரசீது எண் - 790 நாள் - 14.02.2018 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

Scanned by CamScanner

## நிபந்தனைகள்

1. கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 1 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 1 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
7. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு / தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
8. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் ( ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் ( அ) கட்டிட வரைபட ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல. மேலும் அதனால் ஏற்படும் எந்த இழப்பிற்கும் ஊராட்சி நிர்வாகம் பொறுப்பாகாது.
9. கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு/ தனி அலுவலருக்கு உரிமை உண்டு.
10. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்
11. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்
12. கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும். மனுதாரருக்கு சொந்தமில்லாத பொது இடத்திலோ அல்லது மற்றொருவர் இடத்திலோ கழிவுநீரை விடக்கூடாது.
13. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.
15. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள் தலைவர் / தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
புலிப்பாக்கம் ஊராட்சி.

பெறுநர்
N.ராஜலட்சுமி த/பெ நாராயணன்
24,மங்கையர்க்கரசி நகர்,
நங்கநல்லூர் , சென்னை - 600 061

Scanned by CamScanner

Office File    Block 18

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்.
முன்னிலை திரு.S.தனராசு பி.இ.,

ந.க.எண்.210/2013/செம3

நாள். 27 .02.2013

பொருள் கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், புலிப்பாக்கம் ஊராட்சி, காந்தலூர் கிராமம், சர்வே எண்கள்.120/9B, 121/1C-ல் 1074.81 ச.மீ கொண்ட மனையிடத்தில் 1606.34 சமீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை
1. ஊராட்சி மன்றத் தலைவர், புலிப்பாக்கம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள். இல்லை.
2. அரசாணை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.23.03.2012
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.17.01.2013 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதி கட்டணம், நன்னிலைக் கட்டணம் ஆகியவை செலுத்தக் கோரியது.
4. மனுதாரர் திருமதி. N.இராஜலட்சுமி அவர்களின் கடிதம் நாள்.26.02.2013 (அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதி கட்டணம், நன்னிலைவரி கட்டணம் ஆகியவை செலுத்தியது)

************

உத்தரவு

பார்வை 1-ல் கூட்டிய கடிதம் மூலம் பெறப்பட்ட இப்பொருள் சம்மந்தமான இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், புலிப்பாக்கம் ஊராட்சி, காந்தலூர் கிராமம், சர்வே எண்கள்.120/9B, 121/1C-ல் 1074.81 ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு "ABCD" என எல்லையிட்டு **மவ/நஊதுஇ(செம)எண்.31/2013** என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் 1606.34 சமீ பரப்பில் தரைத்தளம் + இரண்டு தளங்களில் 29 குடியிருப்புகள் கொண்ட வரைபடங்களுக்கு **கவ/நஊதுஇ(செம) எண்.18(அ,ஆ)/2013** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப இசைவு அளிக்கப்படுகிறது

பார்வை 2-ல் கண்ட அரசாணையின்படி பார்வை 3-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் கோரப்பட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை ரூ.6,04,000/- நன்னிலை வரி ரூ.3,200/- ஆகியவற்றினை பார்வை 4-ல் கண்ட மனுதாரர் கடிதம் மூலம் பெறப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. உத்தேச 29 குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

Scanned by CamScanner

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை [illegible] நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிட[illegible] செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூ[illegible] வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
9. அரசாணை எண்.341. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there and doesnot cover the structural aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning Permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இரண்டு மற்றும் உத்தரவு கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஊராட்சி மன்றத் தலைவர், புலிப்பாக்கம் ஊராட்சி அவர்கள் இறுதி உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் பெறப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்புமாறு ஊராட்சி மன்றத் தலைவர், புலிப்பாக்கம் ஊராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2-7/2/13

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
செங்கல்பட்டு

27/2/13

<u>இணைப்பு</u>
வரைபடங்கள் - 2

<u>பெறுநர்</u>
ஊராட்சி மன்றத் தலைவர்,
புலிப்பாக்கம் ஊராட்சி.
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்

<u>நகல்</u>
திருமதி.N.இராஜலட்சுமி
க/பெ.டி.நாராயணன்,
எண்.24, மங்கையர்கரசி நகர்,
நங்கநல்லூர், சென்னை- 61

Scanned by CamScanner